# பரிசுத்தமுள்ளவன்
# இன்னும் பரிசுத்தமாகட்டும்

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்
## அவர்களின் மேற்கோள்கள்

# வெளிப்படுத்தின விசேஷம் 22:11

அநியாயஞ்செய்கிறவன் இன்னும்
அநியாயஞ்செய்யட்டும்;
அசுத்தமாயிருக்கிறவன் இன்னும்
அசுத்தமாயிருக்கட்டும்;
நீதியுள்ளவன் இன்னும்
நீதிசெய்யட்டும்;
பரிசுத்தமுள்ளவன் இன்னும்
பரிசுத்தமாகட்டும்.

***இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:***

①

**செய்தி: 60-12-31 வெளிப்படுத்தின விசேஷம் 4 அதிகாரம் #1**

167. நாம் வசனத்திற்குத் திரும்பிப் போவோம்.

"…. இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது, அந்தச் சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார்."

வெளி.4:2

168. "சிங்காசனம்" என்பதைக் கவனியுங்கள். அவர் சிங்காசனத் தின் மேல் உட்கார்ந்தார். அவர் இனிமேல் பூமியில் குத்துவிளக்கு களின் மத்தியில் இருக்கவில்லை. எடுத்துக் கொள்ளப்படுதல் நடந்து விட்டது. அவர்

மகிமையில் இருக்கிறார். தமது சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். தொடர்ந்து வாசித்து நீங்கள் கவனிக்க வேண்டுமென விரும்புகிறேன். 5ம் அதிகாரத்தில் பார்க்கையில், அது இரக்கத்தின் சிங்காசனம் அல்ல என்பதைக் காண்கிறோம். அது இனிமேல் கிருபாசனம் அல்ல. அதுதானே நியாயாசனம் ஆக இருக்கிறது. ஏனெனில் அக்கினியும், மின்னல் களும், இடிமுழக்கங்களும் அதிலிருந்து புறப்பட்டுச் சென்றது. இனிமேல் அங்கே இரக்கம் இல்லை (அது முடிந்துவிட்டது. சபைக் காலமானது முடிவடைந்துவிட்டது).

''அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்,
நீதியாயிருக்கிறவன் இன்னும் நீதி செய்யட்டும். பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்த மாகட்டும்.'' இனிமேல் அது கிருபாசனம் அல்ல.

169. இன்றிரவில் இரத்தமானது அந்த சிங்காசனத்தின் மேல் இருக்கிறது. அதுதானே இரக்கத்தைத் தேடுகிற ஒவ்வொரு பாவிக்கும் கிருபாசனமாக இருக்கிறது. ஆனால் அந்த நாளில் அது கிருபாசனமாக இருக்கமாட்டாது. அது நியாயாசனமாக இருந்து, அதின் மேல் சினம் கொண்ட தேவன் அமர்ந்திருக்கிறதாக இருக் கிறது. அங்கே... "நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?". அவர் தமது மகிமையின் மேகங்களோடு வரும் பொழுது, மலைகள் கூட ஒளிந்து கொள்ள முயலும். அப்படியிருக்க நாம் அப்பொழுது எங்கே நிலைநிற்க முடியும்?

மெய்யாம் ஜீவ நதி, பாவம் போக்கும் நதி,

வேறே நதியை அறியேன்,

இயேசுவின் இரத்தந்தானே.

170. ஓ, என்னே ஒரு பாடம் இது! விளங்காத சத்தம் அல்ல! அவரது சிங்காசனம்

அவர்.... ''சிங்காசனத்தின் மேல்.... வீற்றிருந்தார்.'' (அவர் இனிமேல் இங்கே இல்லை.)

171. அது இன்னொரு காரியம்; மகா உபத்திரவ காலத்திற்கு முன்பாக சபையானது மேலே எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டது என்பதற்கான நிரூபணமாக அது இருக்கிறது. பார்த்தீர்களா? ஏன்? அவர் மகிமையில் இங்கே சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார், சபையானது பூமியை விட்டுப் போய்விட்டது. பிறகு, அவர் உபத் திரவ காலத்தில் வருகிறார். நான் எப்பொழுதும் அவ்வாறு தான் கூறி வந்திருக்கிறேன்.

172. நோவாவின் நாட்களில், ஒரு துளிமழை கூட பெய்யும் முன்னர், நோவா

பேழைக்குள் போய்விட்டான். சோதோமில் அக்கினி விழுவதற்கு முன்னர், லோத்து சோதோமைவிட்டு வெளி யேறி விட்டான். அணு குண்டு விழுவதற்கு முன்னர் சபையானது மகிமைக்குள் பிரவேசித்துவிடும். அதுசரிதான். அணுகுண்டு விழுவதற்கு முன்னர் அவ்வாறு நடக்கும்.

173. "முதலில் விழுந்ததைக் குறித்து என்ன?' என்று கேட்கலாம். அது அஞ்ஞானிகள் மேல்தான் விழுந்தது, கிறிஸ்தவர்கள் மேல் அல்ல .

174. இப்பொழுது கவனியுங்கள். ஓ! அவர் தம்முடைய கிரியை பூமியில் முடித்தார், அவர் தம்முடைய சபையை பூமியை விட்டு எடுத்துவிட்டு, இப்பொழுது அவர் நியாயத்தீர்ப்பை அனுப்பு கிறார். உலகம் அவரைப் புறக்கணித்தது. அவர் தம்முடைய நியாயத்தீர்ப்பை அனுப்பினார். அவரும்

அவருடைய சபையும் மகிமைக்குள் போய்விட்டனர்.

---

②

***செய்தி:*** 64-08-23E ***கேள்விகளும் பதில்களும்*** COD #20

306. மணவாட்டி எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, புத்தியில்லாத கன்னிகை எவராகிலும் இரட்சிக்கப்படுவார்களா, அல்லது எல்லோருமே இழக்கப்படுவார்களா?

173. இல்லை! பாருங்கள், மணவாட்டி பூமியிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, புறஜாதி சபைக்கு எல்லாமே முடிவடைந்திருக்கும். தேவ ஆவியானவர் பூமியை விட்டுப்போய் விடுகிறார். "அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன்

இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்." (வெளி.22:11). வேறு சொற்களில்கூறுவோமானால், பரிசுத்த ஸ்தலம் புகையினால் நிறைகிறது. அங்கு தான் வியாஜ்யத்தைக் குறித்து வழக்காட வழக்கறிஞர் நின்று கொண்டிருக்கிறார். கிறிஸ்து பரிசுத்த ஸ்தலத்தை விட்டுப் புறப்படுகிறார்; அவர் மத்தியஸ்தம் செய்த காலம் முடிவடைகிறது. எடுத்துக் கொள்ளப்படுதல் வருகிறது. அவர் பரிசுத்த ஸ்தலத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்று, மீட்பின் புத்தகத்தை வாங்கிக் கொண்டு, அவர் மீட்டுக் கொண்ட எல்லாவற்றையும் உரிமை கோரிப் பெற்றுக் கொள்கிறார். மத்தியஸ்த ஊழியம் அதன்பிறகு கிடையாது. எத்தனை பேர் அதை புரிந்து கொண்டீர்கள்? அது முத்திரைகளில் ஒன்றில் உள்ளது, அல்லது... ஆம், முத்திரைகளில், அப்படித்தான் நினைக்கிறேன், கிறிஸ்து தமது மத்தியஸ்த

ஊழியத்தினால் கிடைக்கப் பெற்றவர்களை உரிமை கோருவதற்கென புறப்பட்டு வருகிறார்.

174. இப்பொழுது, ஒரு நிமிடம், "புத்தியில்லாத கன்னிகை இரட்சிக்கப்படுவாளா?" இல்லை! நடப்பது என்னவானாலும், இப்பொழுதே நடக்கிறது. அந்த காலத்துக்குப் பிறகு அவள்... இப்பொழுது, அவள் உபத்திரவ காலத்தின் வழியாய் கடந்து செல்ல வேண்டும். அதற்கு காரணம் என்னவென்றால், அவள் பிராயச்சித்தத்தை அதன் முழுமையில் ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்து விட்டாள். அவள் ஒரு விசுவாசி, விசுவாசியைப்போல் நடந்து கொண்டவள், ஆனால் அவள் உபத்திரவ காலத்தின் வழியாக கடந்து செல்ல வேண்டும். "வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து வெள்ளத்தை ஊற்றிவிட்டு, அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம் பண்ணப்

போயிற்று' என்று வேதம் உரைக்கிறது (வெளி. 12:15-17). அது எத்தகைய ஒரு நேரமாயிருக்கும்!

175. பெயர் கிறிஸ்தவ சபைகள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற வேண்டுமென்று இப்பொழுது பசி கொண்டிருப்பதைப் போல் வரலாற்றில் வேறெந்த காலத்திலும் இருந்ததில்லை. நான் கிறிஸ்தவ வர்த்தகர், பிரஸ்பிடேரியன், லூத்தரன், கத்தோலிக்கர், நூற்றுக்கணக்கான பாப்டிஸ்டுகள், கிறிஸ்து சபை, நசரீன்கள், யாத்திரீக பரிசுத்தர், ஏழாம் நாள் ஆசரிப்பு கூட்டத்தார் ஆகியோரைக் குறிப்பிடுகிறேன். அவர்கள் ஒவ்வொருவரும் அதைக் கண்டுக் கொள்ள முயல திரளாக உங்களிடம் வருகின்றனர். பாருங்கள்?

176. இப்பொழுது. இது ஒரு குறிப்பிடத்தக்க காரியம். தயவு செய்து இதை ஒரு உபதேசமாக எடுத்துக்

கொள்ளாதீர்கள். அவ்விதம் சம்பவிக்கும் போது, என்ன நடக்குமென்று வேதம் உரைத்துள்ளதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? காலமானது முடிவடைந்து விட்டது. கவனியுங்கள், ஏழு கன்னிகைகள் - இல்லை, பத்து கன்னிகைகள் மணவாளனைச் சந்திக்கப் புறப்பட்டுச் சென்றனர். அவர்களில் பாதி பேருக்கு தங்கள் தீவட்டிகளில் எண்ணெய் இருந்தது. பாதி பேருக்கு எண்ணெய் இல்லை. அது தான் மரித்துப் போன சரீரத்தின் பாகமும் உயிரோடிருக்கிறவர்களின் பாகமும். ஐந்து பேர் புத்தியுள்ளவர்கள். "இதோ, மணவாளன் வருகிறார்" என்னும் சத்தம் புறப்பட்டுச் சென்று போது அவர்கள் எல்லோரும் தீவட்டிகளைச் சுத்தம் செய்து, கலியாண விருந்துக்குச் செல்ல ஆயத்த மானார்கள். ஆனால் புத்தியில்லாத கன்னிகையோ, "உங்கள் எண்ணெயில் கொஞ்சம் தாருங்கள், எங்கள் தீவட்டிகள்

அணைந்து விட்டன (பாருங்கள்?), உங்கள் எண்ணெயில் கொஞ்சம் தாருங்கள்" என்றனர். அவர்கள் எண்ணெய் வாங்க சென்றிருந்த போது, மணவாளன் வந்து விட்டார். .

177. "மணவாளன் வந்து கொண்டிருக்கிறார்" என்னும் அறிக்கை, பிரகடனம் புறப்பட்டுச் சென்று போது, எல்லோருமே தங்களை வேகமாக சரிப்படுத்திக் கொள்ள விரும்பினர். கையுறுப்பு சுவற்றில் காணப்படுகின்ற நேரம் அதுவல்லவா?

178. "ஓ, எங்களுக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தேவை." "எங்களுக்கு இது; அது, மற்றது தேவை. அவர்கள் அதை வாங்கச் சென்றிருந்த போது, மணவாளன் வந்து விட்டார். புத்தியுள்ள கன்னிகைகள் உள்ளே பிரவேசித்தனர், அவர்களோ புறம்பே

விடப்பட்டனர், அங்கு அழுகையும், புலம்பலும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.

---

③

## *செய்தி:* 63-07-14E **உன்னை தாழ்த்து**

19 கர்த்தராகிய இயேசு இந்நாட்களில் ஒன்றில் வரப்போகிறார்.

அது சடுதியாகவும் இனிமையாகவும் இருக்கும். எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழும் போது, உலகிலுள்ளவர்களில் ஒரு சதவிதத்தில் நூறில் ஒருவர் கூட அதை அறியமாட்டார்கள். அது மிகவும் அமைதியாக நடக்கும், யாருமே அதைக் குறித்து ஒன்றுமே அறியமாட்டார்கள். பாருங்கள்? ஆனால் சிறு சிறு குழுக்கள், "இன்னார் இன்னார் எங்கே?" என்று கேட்பார்கள்.

"ஓ, மூட மதாபிமானக் கூட்டம் ஒன்று அங்கிருந்தது. அது இங்கிருந்து மேலே சென்றுவிட்டதாக அவர்கள் கூறுகின்றனர்.

அது உண்மையல்ல. அவர்கள் எங்கோ சென்றுவிட்டார்கள். அப்படிப்பட்ட மூட மதாபிமானத்தை நாங்கள் கண்டிருக் கிறோம்''.

"ஜெபர்ஸன்வில் என்னுமிடத்தில் ஒரு சிறு கூடாரம் இருந்ததென்று அவர்கள் கூறுகின்றனர். அதன் அங்கத்தினர் பலர் காணாமற் போய்விட்டனராம்.'' பாருங்கள், அவர்கள் அதை விளையாட்டாக எண்ணு கின்றனர்.

அவர்கள், ''அதெல்லாம் ஒன்றுமில்லை'' என்று சொல்வார்கள்.

ஆனால் அது ஏற்கனவே நிகழ்ந்திருக்கும், அவர்கள் அதை அறிந்திருக்கமாட்டார்கள்.

20 உலகம் முழுவதிலும், கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது

எழுந்திருந்து காணப்படுவார்கள். எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழும். சபை வீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படும். அதன் பிறகு உபத்திரவ காலம் தொடங்கும். ஓ, என்னே, அந்த காலத்தில் இங்கிருக்க எனக்கு விருப்பமில்லை. நாம் எவருமே அக்காலத்தில் இங்கு இராதபடி தேவன் தடை செய்வாராக. ஏனெனில் ''அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும். நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்."

(வெளி. 22:11). ஆட்டுக் குட்டியானவர் மீட்பின் புத்தகத்துடன் புறப்பட்டு வந்து, மணவாட்டி எடுத்துக் கொள்ளப்பட்டுவிட்ட பிறகு, அதைப் புறக்கணிக்கிறவர்கள்- யூதர் புறஜாதியார் இருவருமே- உபத்திரவ காலத்துக்குள் பிரவேசிக்க வேண்டும். என்ன ஒரு உபத்திரவ காலம்! எனக்கு அது வேண்டாம். "கர்த்தாவே, இப்பொழுது என்னைப் பரிசுத்தமாக்கும்.'' அது நல்ல

நசரின் போதகம், இல்லையா? (சகோ. நெவில் ''ஆமென்" என்கிறார் -ஆசி). அது உண்மையும் கூட. அது உண்மை . அது சரி.

''ஆண்டவரே, உமது பரிசுத்த ஆவியினால் என்னை நீரப்புவீராக. கர்த்தாவே, இப்பொழுதே உலகம் அனைத்தையும் என்னை விட்டு எடுத்துப் போடும். எனக்கு ஒன்றும் வேண்டாம்...'' அந்த வயோதிப கறுப்பு நிறமுள்ள சகோதரன், "ஐயா, பயணச்சீட்டை என் கையில் வைத்திருக்கிறேன். அது ஏற்கனவே துவாரமிடப்பட்டுவிட்டது (punched). அன்று காலை நான் நதிக்கரைக்கு வரும் போது, எனக்கு எந்தவித தொல்லையும் இருக்கக்கூடாது" என்று கூறினது போல். அது மிகவும் உண்மை. எனக்கு எந்த தொல்லையும் வேண்டாம். பயணச்சீட்டை உங்கள் கையில் வைத்திருங்கள். ஏனெனில் நாம்

கடந்து செல்லப் போகிறோம். சற்று சிந்தித்துப் பாருங்கள், மீட்பின் மகத்தான நேரம் சமீபமாயுள்ளது.

---

④

***செய்தி:* 54-01-03E *கேள்விகளும் பதில்களும்* COD #3**

195. இப்பொழுது வேதவசனம் என்ன கூறுகிறதென்று கவனியுங்கள்: ''கடைசி நாட்களில். . ," என்னுடைய கிறிஸ்தவ நண்பர்களாகிய உங்களுக்கு, தேவ அன்புடன், கூறுவது. வேதாகமம், ''கடைசி நாட்களில் மனிதன் துணிகரமுள்ளவனாயும், இறுமாப்புள்ளவனாயும், தேவப் பிரியராயிராமல் சுகப்போகப்பிரியனாயும் இருப்பான்" என்று கூறுகின்றது. இப்பொழுது அது உண்மையாயிருக்கிறதல்லவா?

196. இந்த கட்டிடத்தில் இருக்கின்ற ஒரு குறிப்பிட்ட நபர் அன்றொரு இரவு புத்தாண்டு விருந்திற்கு சென்றார், அடித்தளத்தில் அவர்கள் பானங்களும் களியாட்டங்களும், ஐஸ்கிரீம் இரவு உணவுகளும் இன்னும் மற்றவைகளை அவர்கள் கொண்டிருந்தனர். சபைகள் நடனங்களைக் கூட வைக்கின்றன. செய்யவேண்டாம் என்று தேவன் சரியாக எதைக் கூறினாரோ, அவர்கள் அதை கிறிஸ்துவின் நாமத்தில் செய்கின்றனர். சபை என்ன செய்ய வேண்டுமென்று இயேசு கூறினாரோ அது இங்கேயிருக்கிறது, ஆனால் அவர்கள் அதை மறுதலிக்கின்றனர். இயேசு - இங்கே தம்முடைய கடைசி வார்த்தைகளாக சபைக்கு தம்முடைய சித்தமும் பிரமாணமுமாக: "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன்

இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (இது மேய்ப்பர் ஒருவேளை இதுவரையிலும் வாசித்திருக்கலாம். இதோ மற்றையபாகம்) விசுவாசிக்கிறவர்களை இந்த அடையாளங்கள் பின்தொடரும். என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள். அவர்கள் சர்ப்பங்களை எடுப்பார்களானால் அல்லது சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களுக்கு தீங்கு செய்யாது; வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்," என்பதே.

197. இப்பொழுது, அதைத் தான் இயேசு தம்முடைய நாமத்தில் செய்ய வேண்டுமென்று அவர்களிடம் கூறினார், அவர்கள் இருக்கின்ற ஒன்றை மறுதலிக்கின்றனர், ஆனால் அவர்கள் சென்று அவர் கூறினதற்கு முரணாக

செய்து, அது கடந்து விட்டதென்று போதித்து அதனுடன் ஒன்றுமில்லை என்று கூறி, அதற்கு பதிலாக வேதாகமக் கல்வியை கற்றுக்கொடுக்கின்றனர். ஓ, நாம் இருக்கின்ற நிலையைக் குறித்து நமக்கு ஆச்சரியமில்லை.

198. இங்கே கவனியுங்கள், என் சகோதரனே இதை நான் உனக்கு கூறட்டும். இங்கிருக்கின்ற ஒவ்வொரு அங்கத்தினனும் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் மிகவுமாக நிரப்பப்பட்டு அடையாளங்கள் அவர்களைப் பின் தொடருமானால், அந்த எல்லைக்கு சபையானது வருமானால். . .

199. அந்த தீவில் கப்பல் நொறுங்கின பிறகு பரிசுத்த பவுலைக் குறித்து நான் நினைக்கிறேன். தேவன் அவனுக்கு ஒரு தரிசனத்தை அளித்திருந்தார். பதினான்கு பகலும் இரவுகளும். . . அவர்கள் காப்பாற்றப்படுவர் என்கிற நம்பிக்கை

அற்றுப் போயிற்று. அந்த சிறிய, பழைய படகு அங்குமிங்குமாக மிதந்து கொண்டிருந்தது, இரவும் பகலும் பதினான்கு நாட்கள் அவர்களெல்லாரும் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தனர். பவுல் அங்கேயிருந்தான், அவன் ஒரு தரிசனத்தைக் கண்டான். அவன் ''நீங்கள் தைரியமாக இருங்கள், ஏனெனில் நான் யாருடைய ஊழியக்காரனாக இருக்கிறேனோ அந்த தேவனுடைய தூதனானவர், அவர் என்னிடம் நின்று, 'பயப்படாதே நீ இராயனுக்கு முன்பாக நிற்க வேண்டும், இதோ யாத்திரைப் பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்கு தயவு பண்ணினார் என்றான்" என்று கூறினான்.

200. கப்பல் சேதமுற்று கரைக்கு வந்தபோது, அவர்கள் அங்கே அந்த தீவு மக்களுடன் சென்றார்கள். பவுல் சில விறகுகளை வாரி அந்த நெருப்பின் மீது போடுகையில் அங்கே ஒரு பெரிய சர்ப்பம்

இருந்தது, அது அவனுடைய கையைக் கவ்விக் கொண்டது. அந்த சர்ப்பம், ஒரே நிமிடத்தில் கொல்லக் கூடிய விஷத்தை அவனுடைய கையில் ஏற்றினது. அந்த தீவார் அதைக் கண்டு, "கவனி, அந்த ஆள் செத்து மடிவான், இன்னும் ஒரு நிமிடத்தில் அவன் மரித்துப் போவான். அவன் சுவிசேஷத்தை பிரசங்கிக்க தகுதியற்றவன்'' என்று கூறினார்கள்.

201. பக்தி வாய்ந்த ஜனங்கள் அவனை சங்கிலியினால் கட்டினார்கள். அந்த நாளில் இருந்த மிக அருமையான சபை அவனைச் சங்கிலியில் கட்டிப்போட்டது, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சட்டமானது இல்லையென்றால், அதே காரியத்தை தான் இன்றைக்கும் காண்பீர்கள். அது சரி! அவள்-அவள்சிறிது சட்டத்தை உடைக்கும்போது பாருங்கள்.

202. ஆகவே ஒரு சர்ப்பம் அவன் கையைக் கவ்விக் கொண்டது. இப்பொழுது கவனியுங்கள். பவுல் பயப்படவில்லை. அவன் "இயேசு கிறிஸ்து, 'சர்ப்பங்களை அவர்கள் எடுத்தாலும் அது அவர்களுக்கு தீங்கு செய்யாது என்று கூறினார்" என்றான். ஆகவே அவன் நடந்து நெருப்பிலே அதை உதறித் தள்ளி; திரும்பி சில விறகுகளை பொறுக்கி நெருப்பிலே போடுவதற்காக எடுத்து, தன் முதுகை காட்டி அனலூட்டிக் கொண்டான்; இந்த பக்கமாக திரும்பி தன் கைகளுக்கு அனல் காட்டினான். அந்த தீவார், ""ஏன் இவன் இன்னும் மரிக்கவில்லை? அந்த மனிதன் ஏன் மரிக்கவில்லை? ஏன் அவன் சடிதியாய் விழுந்து சாகவில்லை?" என்றனர். ஆனால் பவுலோ முழுவதுமாக பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்தான் (நான் என்ன கூற முளைகிறேன் என்று பாருங்கள்?) அந்த

விஷம் அவனை பாதிக்காத அளவிற்கு முழுவதுமாக பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்தான் ,

203. ஓ, சகோதரனே, பரிசுத்த ஆவியினால் நிறைந்திருக்கிற ஒரு சபையை எனக்குத் தாருங்கள், வேத சாஸ்திரம் படித்தவர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக செய்யத் தவறினதை தேவன் ஒரு வருடத்தில் செய்வார். சபையின் அபிஷேகமானது வரும் வரை காத்திருங்கள். அந்த சிறிய மீதமுள்ளவர்கள், அவர்களுக்கு விசுவாசம் இருக்கிறது – புறஜாதிகளின் கதவுகள் அடைக்கப்பட்ட பிறகு, தேவன் அப்பொழுது ஒரு சபையை அபிஷேகம் பண்ணுவார். ''அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும், நீதியாயிருக்கிறவன் இன்னும் நீதியாக இருக்கட்டும். பரிசுத்தமாயிருக்கிறவன்

இன்னும் பரிசுத்தமாயிருக்கட்டும் '' தேவன் சபையை தேவனுடைய வல்லமையால் அபிஷேகம் பண்ணுவார், காரியங்கள் அப்பொழுது சம்பவிக்கும். அப்பொழுது மாத்திரமல்ல, இப்பொழுதும் அவர் அதைச் செய்கின்றார்.

204. அடையாளங்களையும் அற்புதங்களையும் கவனித்து; பின்பு மக்கள் சுற்றும் முற்றும் பார்த்து “அது பிசாசினால் உண்டானது" என்று கூறுகின்றனர். ஓ ஏனெனில் அவர்கள் வேத வசனங்களையோ, அல்லது தேவனுடைய வல்லமையையோ அறியாதிருக்கின்றனர். அதன் காரணமாகத்தான் அது அங்கே இருக்கின்றது.

5

**செய்தி: 63-11-10M இப்பொழுது காவலிலுள்ள ஆத்துமாக்கள்**

174 ஆண்டவராகிய இயேசுவே, நீர் பெக்கியையும், சாராளையும், ஜோசப்பையும் இரட்சிக்க வேண்டுமென்று ஜெபிக்கிறேன். அவர்களையும் கூட, ஆண்டவரே, என் பிள்ளைகளுக்கு இது நேரிட வேண்டாம், கர்த்தாவே. என் சகோதரர்களுக்கும், என் நண்பர்களுக்கும் இது நேரிட வேண்டாம். ஆண்டவரே, இதை அருள்வீராக. எங்களுக்குத் தெரியாது. எங்களுக்குத் தெரியாது, ஆனால் கர்த்தாவே, ஏதோ ஒன்றை நாங்கள் காண்கிறோம். எங்களுக்கு முன்னால் இப்பொழுது இருப்பது, எங்களை அசைக்கக் கூடிய ஒரு அடையாளமா? ஆண்டவரே, இதை அருள்வீராக. சீக்கிரமாக எங்கள் அனைவரையும் உம்மண்டையில்

இழுத்துக் கொள்ளும், கர்த்தாவே, நாங்கள் உம்மை நேசிக்கிறோம். எங்களுக்கு நீர் தேவை. பிதாவே, அப்படியே ஆகக்கடவது.

பரிசுத்த ஆவியானவர் தாமே இப்பொழுது நமது இருதயங்களில் ஆறுதலைத் தருவாராக. இந்த மணி வேளையில் நாங்கள் உமக்கு சாட்சிகளாக இருக்க வேண்டுமென்று ஜெபிக்கிறோம். ஏனெனில் இது நடந்தே ஆக வேண்டுமென்று எங்களுக்குத் தெரியும். இது காலங்கள் தோறும் முன்னுரைக்கப்பட்டு வந்துள்ளது. கடைசி காலத்திலுள்ள நாங்கள் இந்த அடையாளங்கள் தோன்றுவதைக் காணும்போது, அதை சந்தித்தே ஆகவேண்டும்.

இந்தக் காரியம் சம்பவிக்குமென்று எங்களுக்குத் தெரியும். இது அநேக ஆண்டுகளாக எங்களுக்கு

அறிவிக்கப்பட்டு வந்துள்ளது. இப்பொழுது அது எங்கள் வாசற்படியில் இருப்பதை நாங்கள் காண்கிறோம். மகத்தான தேவனின் கோபாக்கினை, தெருக்களின் வழியாகச் சென்று, கதவுகளின் மேல் இரத்தம் காணப்படாத விருத்தசேதன மற்றவர்களை பொறுக்கியெடுத்து, சங்காரத்தூதன் அவர்களை சந்திக்கும்படி செய்தது. அவர்கள் தங்கள் விருப்பப்படி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே மரித்தவர்களாயிருக்கின்றனர்; இரக்கம் பெறாதவர்களாய், தேவனற்றவர்களாய், ஒருபோதும் இரட்சிக்கப்பட முடியாதவர்கள்.

175 தேவனே, இரட்சிக்கப்பட்டவர்களுக்காக நாங்கள் உமக்கு எவ்வளவு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்! கடைசி தூதன் இந்த தேசத்தின் வழியாக கடந்து

வந்து, இரத்தத்தின் கீழ் இல்லாதவர்களை தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கும் இந்நேரத்தில், நாங்கள் உள்ளே இருப்பது எங்கள் இருதயங்களுக்கு எவ்வளவு ஆசீர்வாதமாக உள்ளது! அப்படிப்பட்டவர்கள் இரக்கம் பெறாமலே மரித்தனர்.

அது மோசேயின் கடைசி இழுப்பு. முதலாம் இழுப்பு, அவன் வாலிபனாக இஸ்ரவேல் ஜனங்களுடன் பேசுகின்றான். இரண்டாவது, அவர்களை விடுவிக்க அங்கு சென்றான். மூன்றாவது கடைசி செய்தி... அற்புதங்கள் செய்யப்பட்டுவிட்டன. மோசே மீட்கப்பட்டவர்களுடன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி சென்றான். ஓ, தேவனே, இரக்கமாயிரும், இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

176 இதை கேட்க விரும்புகிறேன்; ஜெபித்துக் கொண்டிருப்பவர்களே,

உங்களுக்கு இரக்கம் உண்டு என்று உணருபவர்களே, தேவன்... தேவனுடைய ராஜ்யத்தில் இருப்பதாக உணருபவர்கள் எப்படியோ நங்கூரமிடப்பட்டதாக உணருபவர்கள், நீங்கள் கிறிஸ்தவர்களென்றும் மறுபடியும் பிறந்தவர்களென்றும் கிறிஸ்துவுக்குள் விசுவாசிக்கும் விசுவாசத்தைப் பெற்றவர்கள், எவ்வித சந்தேகமுமின்றி நீங்கள் கிறிஸ்தவர்களென்று உறுதியாய் அறிந்துள்ளவர்கள் அனைவரும் எழுந்து நிற்க விரும்புகிறேன் - அப்படி நம்புகிறவர்கள், உங்களுக்கு இப்பொழுது கிருபை அளிக்கப்பட்டுள்ளது என்றும், நீங்கள் கிறிஸ்தவர்கள் என்றும், உங்கள் இருதயத்தில் இரத்தம் பூசப்பட்டுள்ளது என்றும், உங்கள் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டன என்று விசுவாசிப்பவர்கள் அனைவரும்.

177 ஜனங்களாகிய உங்களிடம் இதை எடுத்துக் கூறுவது மிகவும் கடினமான காரியம். எல்லாவிடங்களிலிருந்தும் ஜனங்கள் எழுந்து நிற்பதைக் காண்பதற்கு நான் தேவனுக்கு மிகவும் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். நீங்கள்... இந்தக் காரியம் உண்மையா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் என்றாகிலும் ஒருநாள் அது உண்மையாக இருந்தே ஆகவேண்டும். அதற்கு வந்தே ஆகவேண்டும், ஒருக்கால் அது இப்பொழுதாக இருக்கலாம். உலகமானது எல்லா விதத்திலும் தன் சொந்த போக்கிலேயே சென்று கொண்டிருக்கும். ஜனங்கள் இன்னும் படத்துக்கு வந்து கொண்டிருப்பார்கள், இன்னும் கதறி அழுவார்கள். ஆனால் அதனால் எவ்வித பிரயோஜனமும் இராது. அது ஏற்கனவே போய்விட்டிருக்கும், அது

முடிந்துவிட்டிருக்கும். இரக்கம் இருக்கவே இருக்காது. அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். ''பரிசுத்த ஸ்தலம் புகையினால் நிறைந்திருக்கும்'', ''அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்''.

அங்கே இரக்கமேயில்லை. ஆட்டுக்குட்டியானவர் புத்தகத்தை கையில் வாங்கும் போது, அவ்வளவுதான். அத்துடன் எல்லாம் முடிந்துவிடும். அது இப்பொழுதே இருக்கக்கூடும் என்று அநேகமாக காணப்படுவதுபோல் உள்ளது. ஒருக்கால் நமக்கு இன்னுமொரு நாள் அளிக்கப்படலாம், ஒருக்கால் அந்த நாள் இன்றாக இருக்கலாம். ஒருக்கால் நாளை கடைசி நாளாக... ஒருக்கால் இன்றிரவு

கடைசி இரவாக இருக்கக்கூடும். ஒருக்கால் கடைசி ஆண்டாக இருக்கலாம். எனக்குத் தெரியாது, நண்பர்களே, எனக்குத் தெரியாதென்று உங்களிடம் கூறுகிறேன். அது ஒருபோதும் அறிவிக்கப்படாது.

178 ஆனால் தேவன் ஜீவபுத்தகத்தில் பெயரெழுதப்பட்டுள்ள கடைசி நபரை மீட்டுக் கொள்ளும் போது, அதோடு முடிந்துவிடும்.

பாருங்கள். அதன்பின்பு எப்படியாயினும் வேறு யாரும் இருக்கமுடியாது. வேறு யாருமே இருக்கமுடியாது. அவ்வளவுதான். அது முடிந்துவிட்டது. அது உண்மையென்று எத்தனை பேருக்குத் தெரியும்? (சபையார் ''ஆமென்" என்கின்றனர் - ஆசி.) அது உண்மை. நாங்கள் உணருகிறோம்... இத்தனை ஆண்டு காலமாக நான் பிரசங்கித்து, எச்சரித்து வந்த இந்த

சபையோருக்கு இப்படிப்பட்ட ஒரு செய்தியை திறமையற்ற விதத்தில் (Amateur form) நான் அளித்ததை காணும் போது - நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று இதை கூறுகிறேன் - திறமையற்ற விதம். இன்னும் சில காரியங்களை நான் உங்களிடம் கூறியிருந்தால், அது உங்களை குலுக்கி பயப்படுத்தியிருக்கும். ஆனால் அவைகளை கூறாமல் விட்டுவிட்டேன். அவைகளைக் கூற வேண்டாமென்று எனக்குத் தோன்றினது; ஏனெனில் எனக்கு நிச்சயமாகத் தெரியாது. நான் எங்கே நடக்கிறேன் என்று நிச்சயமாகத் தெரியாவிட்டால், நான் மெதுவாகவே காலடி வைத்து நடப்பேன் - ஆனாலும் நான் இதை உங்களிடம் கூறுகிறேன்.

179 கவனியுங்கள், நீங்கள் சந்தோஷமாயிருக்கிறீர்கள் அல்லவா?

உங்கள் வாழ்க்கையில் இதைக் காட்டிலும் மேலான காரியம் ஒன்றை நீங்கள் செய்துள்ளதாக நினைத்துப் பார்க்க முடியுமா? ஒருக்கால் இப்பொழுது அது முடிந்திருந்தால்? எல்லாமே செய்து முடிந்துவிட்டிருந்தால்? "ஓ, சகோ. பிரன்ஹாம் ஒருக் கால்..'' என்று நீங்கள் சொல்லலாம்.

ஆம், எனக்குத் தெரியும். அவர்கள் தங்கள் போக்கில் சென்று கொண்டேயிருக்கக் கூடும். ஒவ்வொரு காலத்திலும் அவர்கள் அப்படித்தான் செய்தனர். அதை உங்களுக்கு நான் விளக்கி, வேதத்திலிருந்தும் நிரூபித்தேன். உலகம் தன் போக்கில் சென்று கொண்டேயிருந்தது. ஆனால் அது முடிவடைந்திருந்தது.

⑥

***செய்தி:*** 63-03-24 M ***முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்*** COD #17

207. எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழ்ந்த பின்பு, எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்கு கொள்ளாத சபை ஏதாவது முடிவில் இரட்சிக்கப்படுமா?

338. இல்லை, ஊஹும், ஏனெனில் இரத்தம் போய்விட்டது. பாருங்கள். அப்பொழுது பரிந்து பேசுதல் இராது - புறஜாதியாரின் காலம் முடிவடைந்து விட்டது, எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழ்ந்த பின்பு, எந்த ஒரு சபையும் இரட்சிப்படைய முடியாது. ஊஹும் சபை... 'அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.'' பாருங்கள்?

சபை எடுக்கப்பட்ட பின்னர் அப்படியொன்றும் நிகழாது.

---

⑦

## *செய்தி:* 63-03-18 *முதலாம் முத்திரை*

59. இங்கே மத்தியஸ்த ஊழியத்தைச் செய்து கொண்டிருந்த ஆட்டுக் குட்டியானவருக்கு யார்யாருடைய பெயர் உலகத் தோற்றத்துக்கு முன் எழுதப்பட்டுள்ளது என்பது தெரியும். அப்பெயர் கொண்டவர்கள் உலகத்தில் தோன்றும்வரை அவர் மத்தியஸ்த ஊழியத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும். உங்களுக்குப் புரிகிறதா? (சபையார் "ஆமென்" என் கின்றனர்- ஆசி) முன் குறித்தலின் பரிபூரணம். பாருங்கள்? அது சரி. தேவன் எவர்களை நித்திய ஜீவனுக்கென்று நியமித்தாரோ, அவர்களுக்காக அவர் மரிக்க வந்தார்.

பாருங்கள்? பாருங்கள்? அவர் அவர்களைத் தம் முன்னறிதலினாலே கண்டார். அது அவருடைய சுய சித்தம் அல்ல. யாரும் கெட்டுப் போவது தேவனுடைய சித்தமல்ல. ஆனால் யார் கெட்டுப்போவார்கள், யார் கெட்டுப்போவதில்லை என்பதை அவர் முன்னறிந்திருந்தார். ஆகையால் பூலோகத்தில் தோன்றாத ஒருவரின் பெயர் அதில் இருந்தாலும்கூட, அந்த மனிதன் தோன்றி ரட்சிக்கப்படும்வரை கிறிஸ்து மத்தியஸ்த ஊழியத்தில் நிலைத்திருக்க வேண்டும்.

60. கடைசி பெயர் வெண்மையாக்கும் திரவத்தில் (Bleach) விழுந்த மாத்திரத்தில், அவருடைய மத்தியஸ்த ஊழியம் முடிவு பெறும். "அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும். பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.'' பாருங்கள்? அவர் மத்தியஸ்த பிரகாரத்தை விட்டுப்

புறப்பட்டவுடன், அது நியாயாசனமாக மாறுகின்றது. அப்பொழுது கிறிஸ்துவை விட்டு அப்பாற்பட்டிருப்பவர்களுக்கு ஐயோ!

---

⑧

## செய்தி: 63-03-23 ஆறாம் முத்திரை

112 இப்பொழுது நாம் இந்த ஆறாம் முத்திரையைத் தியானிக்கையில்... நாம் இப்பொழுது கவனிப்போம். ஆறாம் முத்திரையை நாம் தியானிக்கும்போது அதை அறிந்துகொள்ள பரமபிதா நமக்கு உதவி செய்வாராக. இப்பொழுது 6-ம் அதிகாரம் 12-ம் வசனம் முதல் வாசிப்போம்.

அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக் கண்டேன்: இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப் போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம் போலாயிற்று.

அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது, அதின் காய்கள் உதிருகிறது போல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது.

வானமும் (வானங்களும்) சுருட்டப்பட்ட புஸ்தகம் போலாகி விலகிப்போயிற்று; மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களை விட்டு அகன்றுபோயின. பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத் தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு,

113 அங்கே கவனித்தீர்களா? இந்த “பராக்கிரமசாலிகளைப்” பாருங்கள். அவர்கள் என்ன செய்தனர்? “அவர்கள் வேசித்தனத்தின் உக்கிரமான மதுவைக் குடித்தனர்.” பாருங்கள்? இத்தகையவர் வேசி கொடுத்த மதுவைக் குடித்தனர். பாருங்கள்?

பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்;

அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக் கூடும் என்றார்கள்.

114 ஆறாம் முத்திரைக்கு எப்படிப்பட்ட தொடக்க கூறு (introduction)...பாருங்கள். குதிரை சவாரி செய்வதனின் காலமும் அக்குதிரைகளை எதிர்த்த ஜீவன்களின் காலமும் முடிவடைந்து விட்டது. அதன்பின்னர் உயிர்த்தியாகம் செய்த ஆத்துமாக்களை சிங்காசனத்தின் கீழ் நாம் கண்டோம். அவர்கள் கடைபிடித்திருந்த கொள்கையின் காரணமாக கொலை செய்யப்பட்ட வைதீக

யூதர்கள் தாம் இவர்கள், ஏனென்றால் இவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல.

115 தேவன் அவர்கள் கண்களைக் குருடாக்கினார் என்று நினைவில் கொள்ளுங்கள். புறஜாதி சபை எடுக்கப்படும் நாள்வரை, அவர்கள் கண்கள் குருடாயிருக்க வேண்டும்; ஏனெனில் தேவன் ஒரே சமயத்தில் இருவகை மக்களுடன் ஈடுபடுவதில்லை. அவ்விதம் செய்வாரானால் அது வேதத்திற்கு முரணாயிருக்கும்.

116 அவர் இஸ்ரவேலரிடம் எப்பொழுதுமே ஒரு தேசமாகத் தொடர்பு கொள்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அது இஸ்ரவேல் தேசமாயுள்ளது.

117 ஆனால் புறஜாதிகளிடம் தனிப்பட்ட நபராகத் தொடர்பு கொண்டு, "புறஜாதிகளிலிருந்து எடுக்கப்பட்ட ஜனங்கள்," அவர்களை வேறு பிரிக்கிறார். புறஜாதி சபை உலகின் எல்லா

பாகங்களிலும் வாழும் மக்களிடையே தெரிந்துகொள்ளப்பட வேண்டும். ஆகவே அந்தச் சபையிலே ஒன்றிரண்டு யூதர்களும் காணப்படலாம். பாருங்கள்? அந்த புறஜாதி மணவாட்டிஅரேபியன், ஐயர்லாந்தியர், இந்தியர் மற்றும் உலகிலுள்ள மக்களிலிருந்து இந்த மணவாட்டி மலர்ச் செண்டு (Bouquet Bride) உண்டாக்கப்படும். பாருங்கள்?

118 ஆனால் இப்பொழுது, தானியேலின் எழுபது வாரங்களின் கடைசி பகுதியில் அவர் இஸ்ரவேலருடன் தொடர்பு கொள்ளும்போது, அவர்களிடம் ஒரு தேசமாகவே ஈடுபடுகிறார். ஏனெனில், புறஜாதியார் முடிந்துவிட்டனர். அப்பொழுது புறஜாதியாரை முழுவதுமாக விட்டு யூதர்களிடம் திரும்பப் போகும் காலம் மிகவும் அருகாமையில் உள்ளது, அது ஒருக்கால் இன்றிரவாகவே இருக்கலாம். முற்றிலுமாக, அவரே அவ்வண்ணம் கூறினார். “புறஜாதியாரின்

யுகம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும் காலங்கள் முடிவடைகின்றன" என்று அவர் கூறியுள்ளார், எனவே ஆம், ஐயா.

119 "அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும். நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்." பாருங்கள்?

120 அந்தப் புனித இடத்தில் இரத்தம் இனிமேல் இருக்காது. பலிபீடத்தின் மேல் இரத்தம் இனி இருக்காது. பலியானது அகற்றப்பட்டுவிட்டது. அங்கு புகையும், மின்னல்களும் நியாயத்தீர்ப்பும் தவிர வேறொன்றுமில்லை. இவையனைத்தும் ஊற்றப்பட்டதாக இன்றிரவு நாம் காணப்போகிறோம். பாருங்கள், ஆட்டுக்குட்டியானவர் தம் மத்தியஸ்த ஊழியத்தை விட்டு ஏற்கனவே புறப்பட்டுவிட்டார். மத்தியஸ்த ஊழியம் சிங்காசனத்திலிருந்து முடிவடைந்து விட்டது. நாம் விவரித்துக் காண்பித்தபடி, பலிப்பொருளாகிய மீட்பின் இனத்தான்

இரத்தம் தோய்ந்த ஆட்டுக்குட்டியானவர் முன்னே வருகிறார்-அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற இரத்தம் தோய்ந்த அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் புறப்பட்டு வந்து சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவருடைய கரத்திலிருந்து புத்தகத்தை எடுத்துவிட்டார். அங்ஙனமாயின், காலம் முடிவடைந்துவிட்டது. இப்பொழுது அவர் தாம் மீட்டுக்கொண்டவர்களைப் பெற்றுக்கொள்ள வருகிறார். ஆமென்! அது எனக்கு ஒருவித உணர்ச்சியை உண்டாக்குகிறது.

121 "அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக் கண்டேன். இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது" என்று யோவான் கூறுகிறான் என்று நாம் இப்பொழுது காண்கிறோம். இயற்கை யாவும் தடை செய்யப்படுகின்றன. பாருங்கள்?

122 தேவன் பிணியாளிகளைக் குணமாக்குவது, குருடரின் கண்களைத்

திறப்பது போன்ற பெரிய காரியங்களைச் செய்துகொண்டு வருகிறார், மகத்தான கிரியை செய்கிறார்.

123 இப்பொழுது இயற்கை யாவும் குப்புற விழுவதை நாம் காண்கிறோம். ஆம். என்ன நிகழ்ந்ததென்பதைக் கவனியுங்கள். பூமி அதிர்ச்சி, சூரியன் கறுக்கின்றது. சந்திரன் ஒளியைக் கொடாமல் போகின்றது. நட்சத்திரங்கள் உதிர்ந்து விழுகின்றன. ஆறாம் முத்திரை உடைக்கப்படும்போது இவையனைத்தும் சம்பவிக்கின்றன. ஏன்? ஐந்தாம் முத்திரையின் கீழ், காணப்பட்ட ஆத்துமாக்களைக்குறித்து அறிவிக்கப்பட்ட பிறகு, இது சம்பவிக்கின்றது. பலிபீடத்திலுள்ள ஆத்துமாக்களும் முடிவுற்றனர்.

124 பாருங்கள். இவை நிகழும் தருணம் மிக அருகாமையில் உள்ளது. அது எப்பொழுது வேண்டுமானாலும் சம்பவிக்கலாம். ஏனெனில் சபை

எடுக்கப்பட்டுவதற்கென சற்று ஏறக்குறைய ஆயத்தமாயிருக்கின்றது. ஆனால் இவை நிகழும்போது, மணவாட்டி இங்கி இருக்கமாட்டாள் என்பது ஞாபகமிருக்கட்டும். அவள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருப்பாள் என்பது நினைவிருக்கட்டும். அவள் உபத்திரவக் காலத்தில் கடந்து போக வேண்டியதில்லை. சபை சுத்திகரிக்கப்படுவதற்கென உபத்திரவ காலத்தில் இவை நிகழ்கின்றன. ஆகவே சபையானது இவையனைத்தையும் அனுபவிக்க வேண்டும். மணவாட்டியல்ல. அவர் தமது இருதயத்துக்கேற்ற மணவாட்டியை ஏற்கனவே கொண்டு சென்றுவிட்டிருப்பார். ஆம் ஐயா. அவர் அவளை மீட்டுக்கொண்டார். ஒரு மனிதன் தன் மணவாட்டியைத் தெரிந்துகொள்வது போன்று அவரும் அவளைத் தாமாகவே தெரிந்து கொண்டார். பார்த்தீர்களா? இப்பொழுது, அந்த பூமி அதிர்ச்சி...